தினமலர்
உண்மையின் உரைகல்
நிறுவனர் டி.வி. ராமசுப்பையர்

# தண்டவாளம் ஓரத்தில் மரங்கள்: ரயில்வே பசுமை திட்டம்

புதுடில்லி, அக். 16–
சுற்றுச்சூழலை பாது காக்கும் வகையில், நாடு முழுவதும் தண்டவாளங்களின் ஓரத்தில் மரங்களை நடும் பசுமை திட்டத்தை ரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது.

நாடு முழுவதும், சுற்றுச் சூழல் விழிப்புணர்வை ஏற் படுத்துவதற்காக, அறிவியல் கண்காட்சியை நடத்த, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும், ரயில்வே அமைச்சகமும் முடிவு செய்துள்ளன. இதன் படி, அறிவியல் எக்ஸ்பிரஸ் என்ற பெயரில், நாடு முழுவதும் கண்காட்சி ரயில் இயக் கப்படுகிறது.

டில்லியில் நேற்று நடந்த விழாவில், ரயில்வே அமைச் சரும், பா.ஜ.,வைச் சேர்ந் தவருமான சுரேஷ் பிரபு, கண்காட்சி ரயிலை, கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இந்த விழாவில், அவர் பேசியதாவது:

ரயில்வே துறை சார்பில், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், ஏராளமான திட் டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுச்சூழலுக்கு உகந்த கழிப்பறை, மாற்று எரி பொருளில் இயங்க கூடிய, 'இன்ஜின்' உள்ளிட்ட திட் டங்கள், சோதனை முயற்சி யாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அடுத்தாக, நாடு முழு வதும், தண்டவாளங்களின் ஓரத்தில், மரங்களை நட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தால், சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படு வதுடன், ரயில் பயணிக ளுக்கும், பசுமையான மற்றும் புதுமையான அனுபவமும் கிடைக்கும்.

இதுதொடர்பாக சுற்றுச் சூழல் அமைச்சகத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வரு கிறது. திட்டம் பற்றிய விரிவான அறிவிப்பு, பின் வெளியாகும்.

இவ்வாறு அவர் பேசினார்.